# CITIZEN SPARROW

www.citizensparrow.in | info@citizensparrow.in
Bombay Natural History Society, Opp. Lion Gate
Shaheed Bhagat Singh Rd. Mumbai 400 001

**தகவல் சேகரிப்பவர் பெயர் (உங்கள்பெயர்)______________________நாள் ___________**

**1. எந்த இடத்தைப் பற்றி தகவல் அளிக்கிறீர்கள்? (அந்த இடத்தைப் பற்றி தெளிவான விவரங்களைக் கொடுங்கள். இணைய வரைபடத்தில் பின்னர் அதை கண்டறிய வேண்டும்.)**

______________________________________________________________________________

அருகிலுள்ள டவுன் /நகரம் ______________ மாவட்டம் ______________ அட்சரேகை ______________________ தீர்க்கரேகை ______________________

(எ.கா., 13.3266 மற்றும் 77.9925. இணையத்தில் கண்டறிந்துவிட்டால், இது தேவையில்லை.)

**2. யாரிடம் இருந்து தகவல் பெறுகிறீர்கள்? (பெயர், வேலை, முகவரி, தொலைபேசி எண்.)**______________________________________________________

______________________________________________________________________________

**4. குறிப்பிட்ட நிலப்பகுதி எப்படிப்பட்டது? (ஏதாவது ஒன்றை தேர்ந்தெடுக்கவும்)**

◦ நகரம் (மையம்) ◦ டவுன் ◦ கிராம பகுதி ◦ திறந்த வெளி ◦ மற்றவை_________________
◦ புறநகர் பகுதி ◦ கிராமம் ◦ வயல் பகுதி ◦ காடு

**5. ஒரு கி.மீ. சுற்றளவுக்குள் கீழ்க்கண்ட எந்தப் பகுதி இருக்கிறது? (ஏதாவது ஒன்று)**

◦ மார்கெட் ◦ பஸ் ஸ்டாண்ட் ◦ வழிபாட்டிடம் ◦ விவசாய நிலம் ◦ மற்றவை_____________
◦ உணவகம், ◦ ரயில் நிலையம் ◦ வளாகம் ◦ புல்வெளி
◦ஹோட்டல் ◦ ஏர்போர்ட் ◦ பழைய குடியிருப்பு ◦ புதர் காடு
◦ வர்த்தக பகுதி ◦ தோட்டம்/பூங்கா ◦ புதிய குடியிருப்பு ◦ காடு

**6. நீங்கள் குறிப்பிடும் பகுதி எவ்வளவு பெரியது? (ஏதாவது ஒன்று)**

◦ 100 மீட்டர் சுற்றளவுக்கும் குறைந்தது (சில வீடுகள், கடைகள்)
◦ 500 மீ. முதல் 1 கி.மீ. சுற்றளவுக்குள் (குடியிருப்புப் பகுதி)
◦ 100-500 மீ. சுற்றளவுக்குள் (மார்கெட், பஸ் ஸ்டாண்ட், பூங்கா)
◦ 1 கி.மீ.க்கு மேற்பட்ட பரப்பு (பெரிய கிராமம், டவுன்)

**3. எந்த காலகட்டம்?** (*கீழ்க்கண்டவற்றில் இருந்து: 2010-2012, 2005-2009, 2000-2004, 1995-1999, 1990-1994, 1985-1989, 1980-1984, 1975-1979, 1970-1974, 1965-1969, 1960-1964, 1955-1959, 1950-1954, 1950க்கு முன்*)

| **காலகட்டம் 1** (எ.கா. 2010-2012) ______________ | **காலகட்டம் 2** (எ.கா. 2005-2009) ______________ | **காலகட்டம் 3** (எ.கா. 1995-1999) ______________ |
|---|---|---|
| **7. இந்த காலகட்டத்தில் இங்கே நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? (ஏதாவது ஒன்று)** | | |
| ◦ இங்கே வாழ்ந்தேன் | ◦ இங்கே வாழ்ந்தேன் | ◦ இங்கே வாழ்ந்தேன் |
| ◦ வேலை செய்தேன்/படித்தேன் | ◦ வேலை செய்தேன்/படித்தேன் | ◦ வேலை செய்தேன்/படித்தேன் |
| ◦ அடிக்கடி சென்று வந்தேன் | ◦ அடிக்கடி சென்று வந்தேன் | ◦ அடிக்கடி சென்று வந்தேன் |
| ◦ ஓரிரு முறை சென்று வந்தேன் | ◦ ஓரிரு முறை சென்று வந்தேன் | ◦ ஓரிரு முறை சென்று வந்தேன் |
| ◦ மற்றவை ___________________ | ◦ மற்றவை ___________________ | ◦ மற்றவை ___________________ |
| **8. மேற்கண்ட காலத்தில் சிட்டுக்குருவிகளை எத்தனை முறை பார்த்தீர்கள்? (ஏதாவது ஒன்று)** | | |
| ◦ இல்லை: குருவிகளை பார்க்கவில்லை | ◦ இல்லை: குருவிகளை பார்க்கவில்லை | ◦ இல்லை: குருவிகளை பார்க்கவில்லை |
| ◦ அரிதாக: வருடத்தில் ஒரு சில முறை | ◦ அரிதாக: வருடத்தில் ஒரு சில முறை | ◦ அரிதாக: வருடத்தில் ஒரு சில முறை |
| ◦ எப்போதாவது: மாதத்துக்கு சில முறை | ◦ எப்போதாவது: மாதத்துக்கு சில முறை | ◦ எப்போதாவது: மாதத்துக்கு சில முறை |
| ◦ அடிக்கடி: வாரத்தில் பல முறை | ◦ அடிக்கடி: வாரத்தில் பல முறை | ◦ அடிக்கடி: வாரத்தில் பல முறை |
| ◦ எப்போதும்: தினசரி | ◦ எப்போதும்: தினசரி | ◦ எப்போதும்: தினசரி |
| **9. மேற்கண்ட காலத்தில் எத்தனை சிட்டுக்குருவிகளை பார்த்தீர்கள்? (ஏதாவது ஒன்று)** | | |
| ◦ சுத்தமாகப் பார்க்கவில்லை | ◦ சுத்தமாகப் பார்க்கவில்லை | ◦ சுத்தமாகப் பார்க்கவில்லை |
| ◦ வழக்கமாக 5க்குக் குறைவாக | ◦ வழக்கமாக 5க்குக் குறைவாக | ◦ வழக்கமாக 5க்குக் குறைவாக |
| ◦ வழக்கமாக 5 முதல் 30 வரை | ◦ வழக்கமாக 5 முதல் 30 வரை | ◦ வழக்கமாக 5 முதல் 30 வரை |
| ◦ வழக்கமாக 30 முதல் 100 வரை | ◦ வழக்கமாக 30 முதல் 100 வரை | ◦ வழக்கமாக 30 முதல் 100 வரை |
| ◦ வழக்கமாக நூற்றுக்கும் மேல் | ◦ வழக்கமாக நூற்றுக்கும் மேல் | ◦ வழக்கமாக நூற்றுக்கும் மேல் |
| **10. நீங்கள் குருவிகளைப் பார்த்த காலத்தில் முட்டை கொண்ட கூட்டை பார்த்தீர்களா? (ஏதாவது ஒன்று)** | | |
| ◦ குருவிகளைப் பார்க்கவில்லை | ◦ குருவிகளைப் பார்க்கவில்லை | ◦ குருவிகளைப் பார்க்கவில்லை |
| ◦ குருவிகளை மட்டும் பார்த்தேன் | ◦ குருவிகளை மட்டும் பார்த்தேன் | ◦ குருவிகளை மட்டும் பார்த்தேன் |
| ◦ அவ்வப்போது கூடுகளைப் பார்த்தேன் | ◦ அவ்வப்போது கூடுகளைப் பார்த்தேன் | ◦ அவ்வப்போது கூடுகளைப் பார்த்தேன் |
| ◦ அடிக்கடி கூடுகளைப் பார்த்தேன் | ◦ அடிக்கடி கூடுகளைப் பார்த்தேன் | ◦ அடிக்கடி கூடுகளைப் பார்த்தேன் |

**11. சிட்டுக்குருவிகள் பற்றி உங்கள் அனுபவத்தை இந்தத் தாளின் பின்பக்கம் எழுதுங்கள்**

CITIZEN SPARROW

# தகவல் சேகரிப்பாளர்களுக்கான விதிமுறைகள்

அன்பார்ந்த சிட்டுக்குருவி ஆர்வலரே,

"*சிட்டிசன் ஸ்பாரோ*" என்ற சிட்டுக்குருவிகள் குறித்த கணக்கெடுப்பில் தாங்கள் பங்கேற்றமைக்கு மிக்க நன்றி. இந்த கேள்வித்தாளை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான விதிமுறைகளை கீழே தந்திருக்கிறோம்.

**இந்த கேள்விப்படிவம் எதற்காக?**

*சிட்டிசன் ஸ்பாரோ* என்ற இணையதள கணக்கெடுப்பு பிரபலமாக இருந்தாலும், சிட்டுக்குருவிகள் பற்றி தெரிந்திருக்கும் பலரிடமும் இணைய வசதி இல்லை. எனவே, இந்த கேள்விப்படிவத்தை நகல் எடுத்து, உங்கள் சுற்றுப்புறத்தில் சிட்டுக்குருவிகள் பற்றிய தகவல்களை பதிவு செய்யமுடியும்.

**யாரிடம் தகவல் சேகரிக்கப் போகிறீர்கள்?**

**சிட்டுக்குருவி பற்றி தெரிந்துள்ள யாரிடமும்** (கேள்விகளை கேட்க ஆரம்பிப்பதற்கு முன் இதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்) தகவல் சேகரிக்கலாம். *சிட்டிசன் ஸ்பாரோ* திட்டத்தின் கீழ் **குறிப்பிட்ட பகுதியில் நீண்ட காலம் வாழ்ந்த ஒருவரிடம்**, அதாவது கடைக்காரர்கள், குடியிருப்பு வாசிகள் இடம் தகவல் சேகரிப்பது முக்கியமானது. அவர்கள்தான் வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த நிலைமை பற்றி கூறுவார்கள். **குறிப்பிட்ட பகுதியில் சிட்டுக்குருவிகளை பார்க்கவே இல்லை என்றாலும் அந்தத் தகவலையும் கட்டாயம் பதிவு செய்யவும்.** சிட்டுக்குருவி சிட்டுக்குருவிகள் இல்லாத இடங்களின் தகவல்களும் மதிப்புமிக்கது!

உங்கள் வசதிக்காக, உங்கள் வீடு, அலுவலகத்துக்கு அருகில் தகவலை சேகரிக்கலாம். ஆனால், எந்தப் பகுதியாக இருந்தாலும் நல்லதுதான். உங்களால் ஊருக்கு வெளியே (கிராமம், டவுன்) பகுதிகளில் தகவல் சேகரிக்க முடிந்தால் ரொம்ப நல்லது. குறைந்தபட்சம் 5 – 10 பேரிடம் இது பற்றி கேட்கலாம், குறைவாக இருந்தாலும் தப்பில்லை. உங்களால் இதைவிட அதிகமானவர்களிடம் கேட்க முடியும் என்றால் பாராட்டுக்குரியது.

**எப்படி தகவல் சேகரிப்பது?**

கேள்வித்தாளை நகல் எடுத்து, கையோடு கொண்டு செல்லுங்கள். படிவத்தின் அனைத்து கேள்விகளுக்கும் பதில் பெற வேண்டும். **குறிப்பாக, குறிப்பிட்ட இடம் சார்ந்த விவரங்கள்.** அப்போதுதான் இணையதள வரைபடத்தில் அதை கண்டறிய முடியும். **தகவல் சேகரிக்கும்போது, தயவு செய்து நீங்கள் விரும்பும் பதில்களை கேட்டுப் பெற வேண்டாம்.** சில நேரம் இதை உணராமலேயே நாம் செய்து விடுவோம். "சிட்டுக்குருவிகள் அழிந்துவிட்டது மோசமான விஷயம் இல்லையா?" என்பது போல சாதாரணமாக நாம் முன்வைக்கும் சின்ன விஷயம்கூட, தகவல் தருபவரின் கருத்தை மாற்றி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. முடிந்தவரை இது போல எந்த பதில் கருத்தையும் நாம் தெரிவிக்காமல் இருப்பது நல்லது!

இந்த கேள்விப்படிவத்தில் கேள்விகளுக்கு எண் தரப்பட்டுள்ளது. இந்த எண்கள் www.citizensparrow.in இணையதள கேள்விப்படிவ எண்களை ஒத்திருக்கின்றன. கேள்வி 3, திடீரென கேள்வி 6 மற்றும் கேள்வி 7க்கு இடைப்பட்டு வருவதைப் பற்றி கவலைப்பட வேண்டாம். இதற்குக் காரணம் இந்த கேள்விப் படிவத்தில் மூன்று காலங்களில் இருந்த விவரங்களைப் பற்றி மட்டும்தான் கேட்டிருக்கிறோம். (எ.கா, 1995-1999 அல்லது 2010-2012 என்பது போல). அதேநேரம், **ஒரு நபர் நினைவுகூரும் எத்தனை காலங்கள் தொடர்பான விவரங்களையும் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள்.** அவர் நினைவுகூர்வது 3 காலங்களைத் தாண்டிச் சென்றால், **தனித்தாளில் அந்த விவரங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.**

**இந்த படிவத்தை எப்படி சமர்ப்பிப்பது?**

இந்தப் படிவத்தை இணையத்தில் சமர்ப்பிக்க, www.citizensparrow.in இணையதளத்தில் உங்கள் கணக்கில் நுழையுங்கள். அதில் உள்ள இணையதள வரைபடத்தில் நீங்கள் எந்த இடம் பற்றிய விவரங்களைத் தரப் போகிறீர்கள் என்பதை சரியாகக் குறியுங்கள். கேள்வி 2க்கான பதிலை, அதாவது யாரிடம் தகவல் சேகரித்தீர்கள் என்பதையும் சரியாகக் குறிக்கவும். உங்களிடம் தகவல் அளித்த நபர் பல்வேறு காலங்களைப் பற்றிய தகவல்களைத் தந்திருந்தால், இணையத்தில் ஒவ்வொரு காலத்துக்கும் தனித்தனியாக தகவல்களை நிரப்ப வேண்டியிருக்கும். முதல் காலத்துக்கான தகவலை பதிந்த பின், அந்தப் பக்கத்தின் கீழ் பகுதியில் உள்ள "Add info from a different time period" என்ற பட்டனை கிளிக் செய்யவும். அப்போது, குறிப்பிட்ட இடம் தொடர்பான விவரங்களை மீண்டும் பதியத் தேவையில்லை.

இதில் தகவலை உள்ளிடுவதில் ஏதாவது பிரச்சினை ஏற்பட்டால், info@citizensparrow.in என்ற மின்னஞ்சலுக்கு தகவல் தெரிவிக்கவும்.

சேகரித்த தகவல்களை உங்களால் இணையதளத்தில் பதிவு செய்ய முடியவில்லை என்றால், முழுமைப்படுத்தப்பட்ட கேள்விப்படிவங்களை கீழ்க்கண்ட முகவரிக்கு அஞ்சலில் அனுப்பலாம். நாங்கள் அந்தத் தகவல்களை பதிவு செய்து கொள்வோம். ஆனால் இப்படிச் செய்வதால் நிறைய தவறுகள் நடக்க வாய்ப்பு இருக்கிறது (குறிப்பாக இடம் பற்றிய தவறான தகவல்கள்). எனவே, **தகவல்களை நீங்களே இணையத்தில் பதிவு செய்வதுதான் மிகச் சிறந்தது.** இணையத்தில் தகவல்களை நீங்கள் பதிவு செய்த பின்னர், அந்தப் படிவங்களை எங்கள் முகவரிக்கு அனுப்பி வைத்தால், அவற்றைத் தொகுத்து பாதுகாப்பாக வைப்போம்.

**படிவத்தை அச்சிடுங்கள்/நகலெடுங்கள்** → **பொதுமக்களிடம் சிட்டுக்குருவிகளைப் பற்றி விசாரியுங்கள்** → **சேகரித்த தகவலை இணையத்தில் பதிவு செய்யுங்கள்**


தொடர்பு முகவரி:

Citizen Sparrow

Bombay Natural History Society

Opp. Lion Gate, Shaheed Bhagat Singh Road, Mumbai 400 001, Maharashtra

www.citizensparrow.in | info@citizensparrow.in


**இந்த கேள்விப் படிவத்தை அச்சிட்டோ, நகல் எடுத்தோ இலவசமாக விநியோகிக்கவும்**